சார்பு நீதிமன்றம், மேட்டுப்பாளையம்
முன்னிலை : திரு.கே. பழனிவேல், பி.எல்.,
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்

2026 ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 24 ஆம் நாள் செவ்வாய்கிழமை
(திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் பங்குனித் திங்கள் 10 ஆம் நாள்)

அசல் வழக்கு எண். 134/2025
CNR.No. TNCB190007122025

கனரா வங்கி
சிறுமுகை கிளை
வங்கிக்காக அதன் கிளை மேலாளர் ....வாதி

-இடையே-

1. ராஜன்
2. மயில்சாமி ....பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு .எல்.அசோக்குமார்,, அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும் வாதி தரப்பு வாதத்தைக் கேட்டும் இறுதியாக இன்று இந்நீதி மன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

01. இந்த வழக்கானது பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு செலுத்த வேண்டிய ரூ.1,58,638.45/- கடன் பாக்கித் தொகையை தாவா தாக்கல் செய்த நாளில் இருந்து வாங்கிய கடனுக்கு தற்போதைய வட்டி வருடத்திற்கு 10.60 சதவீதம் செலுத்த உத்தரவிடக்கோரியும், வாதிக்கு பிரதிவாதிகள் செலவுத் தொகையுடன் கொடுக்க உத்தரவிடவேண்டுமாய் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**02. வழக்குரையின் சுருக்கம் :-**

இவ்வழக்கானது பிரதிவாதிகள் வாதி வங்கியை அணுகி 2 ம் பிரதிவாதியின் DME, Ramakrishna Mission Vidyalaya Polytechnic, Coimbatore 3 வருட படிப்பிற்காக கல்வி கடன் வேண்டி 07.11.2008- ம் தேதியன்று கல்வி கடன் கணக்கு எண்.103165101 2903 ன் கீழ் ரூ30.000/- த்திற்கு 10.60 சதவீத வட்டியுடன் செலுத்த கடன் அனுமதி வழங்கியது என்றும் பிரதிவாதிகள் பெற்ற கடன் தொகையை ஒரு வருட காலத்திற்குள் திருப்பி செலுத்துவதாகவும் ஒப்புக்கொண்டார்கள் . மேற்படி பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டு வாதி வங்கிக்கு ஆதரவாக ரிவிவல் லெட்டரை 31.01.2012, 08.09.2014, 01.09.2017, 26.08.2020, 22.03.2023 தேதிகளில் ஏற்படுத்தி கொடுத்தனர்.

மேலும் பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டபடி கடன் தொகையை திரும்ப செலுத்தவில்லை. வாங்கிய கடன் தொகையை வட்டியுடன் சேர்த்து திருப்பி செலுத்தக்கோரி வாதி வங்கி பிரதிவாதிகளுக்கு 15.10.2024 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பினை அனுப்பினார். அந்த அறிவிப்பினை 18.10.2024 அன்று பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டுள்ளார்கள். ஆகவே வாதிக்கு செலுத்த வேண்டிய கடன் பாக்கித் தொகை ரூ . 1,58,638.45/- ம் அதற்கு பின் வட்டியாக 10.60% வட்டி வழங்க பிரதிவாதிகளுக்கு ஆணையிட வேண்டி வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

1 மற்றும் 2 பிரதிவாதிகளை 10.03.2026 ம் தேதி அழைத்தும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டுள்ளார்கள்.

வாதி தரப்பில் வாதி வா.சா. 1 ஆக விசாரிக்கப்பட்டும் சான்றாவணங்கள் வா.சா. ஆ 1 முதல் வா.சா. ஆ 10 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

03. தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை என்னவென்றால் இந்த வழக்கு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

04. <u>தீர்வு:</u>

வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதி தரப்பு சாட்சிய சான்றாவணங்களை அனுசரித்து வாதியின் வழக்கை அனுமதிக்கும்படி வாதுரை செய்தார்.

வாதி தரப்பு வழக்கை நிரூபிக்கும் மூலமாக வாதி வா.சா,1 ஆக இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்திருக்கிறார். வா.சா.1-ன் சாட்சிய சங்கதி என்பது 2 ம் பிரதிவாதியின் DME, Ramakrishna Mission Vidyalaya Polytechnic, Coimbatore 3 வருட படிப்பிற்காக கல்வி கடன் வேண்டி 07.11.2008 ம் தேதியன்று கல்வி கடன் கணக்கு எண் .1031651012903 ன் கீழ் ரூ 30,000/- த்திற்கு 10.60 சதவீத வட்டியுடன் செலுத்த கடன் அனுமதி வழங்கியது என்றும் பிரதிவாதிகள் பெற்ற கடன் தொகையை ஒரு வருட காலத்திற்குள் திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டு வாதி வங்கிக்கு ஆதரவாக ரிவிவல் லெட்டரை 31.01.2012, 08.09.2014, 01.09.2017, 26.08.2020, 22.03.2023 தேதிகளில் ஏற்படுத்தி கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளதாகவும் மேலும் பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டபடி கடன் தொகையை திரும்ப செலுத்தவில்லை . வாங்கிய கடன் தொகையை வட்டியுடன் சேர்த்து திருப்பி செலுத்தக்கோரி வாதி வங்கி பிரதிவாதிகளுக்கு 15.10.2024 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பினை அனுப்பியதாகவும் அந்த அறிவிப்பினை பிரதிவாதிகள் 18.10.2024 அன்று பெற்றுக்கொண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி வா.சா.1ன் சாட்சியமும் அதனை உறுதிப்படுத்தும் விதமாக வா.சா.ஆ 1 முதல் வா.சா.ஆ.10 ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி சாட்சிய சான்றாவணங்களில் இருந்து வாதி வங்கிக்கு கடன் தொகையை செலுத்த வேண்டிய கடப்பாடு கொண்ட பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி தன் தரப்பு ஆட்சேபனையை தெரிவிக்கவில்லை என்பதால் வழக்குரை சங்கதிகளிலிருந்து பிரதிவாதிகள் உட்கிடையாக ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்பது மட்டுமில்லாமல் வாதி தன் தரப்பு வழக்கை சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளார்

என்றும் இந்நீதிமன்றம் முடிவிற்கு வந்து வாதியின் வழக்கை அனுமதிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

05. **இறுதியாக,**

முடிவில் வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட்டு தாவா தொகை ரூ. 1,58,638/- ம் மற்றும் ரூ .30,000/-க்கு வழக்கு தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை ஆண்டுக்கு 9 சதவீதம் வட்டியும் பின்னிட்டு தொகை வசூலாகும் நாள் வரை 6 சதவீதம் பின் வட்டியும் வழக்கு செலவுத் தொகையுடன் பிரதிவாதிகள் கொடுக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்ப்புரை பகரப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 24 ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/-K.Palanivel,
சார்பு நீதிபதி,
மேட்டுப்பாளையம்,

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 07.11.2008 | கடன் விண்ணப்பம் | அசல் |
| வா.சா.ஆ.2 | 17.02.2009 | கல்வி கடன் ஒப்பந்தம் | அசல் |
| வா.சா.ஆ.3 | 31.01.2012 | கடன் ஒப்புகை ஆவணம் | அசல் |
| வா.சா.ஆ.4 | 08.09.2014 | கடன் ஒப்புகை ஆவணம் | அசல் |
| வா.சா.ஆ.5 | 01.09.2017 | கடன் ஒப்புகை ஆவணம் | அசல் |
| வா.சா.ஆ.6 | 26.08.2020 | கடன் ஒப்புகை ஆவணம் | அசல் |
| வா.சா.ஆ.7 | 22.03.2023 | கடன் ஒப்புகை ஆவணம் | அசல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.8 | 15.10.2024 | வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.9 | 18.10.2024 | அஞ்சலக ஒப்புகை அட்டை 2-எண்ணிக்கை | அசல் |
| வா.சா.ஆ.10 | | கணக்கு பட்டியல் | கணிணி நகல் |

**சாட்சிகள் பட்டியல்**

**வாதி தரப்பில்** **பிரதிவாதிகள் தரப்பில்**

வா.சா.1. ரமேஷ் (கிளை மேலாளர்) --இல்லை--

.

Sd/-K.Palanivel,
சார்பு நீதிபதி,

மேட்டுப்பாளையம்,